Crl.Misc/39

# DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE

VALANGAIMAN

Calendar

Miscellaneous **Case No. CC. 14/2025**

Preliminary Register

Deposition of **PW- 2 LW-2**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Name | : | அறிவழகன் | Father Name | : | மாணிக்கம் |
| Village | : | ராஜேந்திரநல்லூர் | Taluk | : | வலங்கைமான் |
| Caste | : | | Calling | : | TNCSC – உதவியாளர் தென்குவளவேலி |
| Religion | : | | Age | : | 58 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of 27th day of October 2025.

எதிரிகள் ஆஜர். எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் முன்னிலை.

**<u>முதல் விசாரணை-</u>**

நான் மேற்படி முகவரியில் வசித்து தென்குவள வேலியில் உள்ள TNCSC ல் உதவியாளராக பணிபுரிந்து வருகிறேன். அ.சா.1 எனது அண்ணி ஆவார். ஆஜர் எதிரிகளை தெரியும். ஆஜர் எதிரிகள் எனது ஊரை சேர்ந்தவர்கள். கடந்த 24.08.2024ம் தேதி இரவு சுமார் 10, 10.30 மணியளவில் அ.சா. 1 குடியிருக்கும் தெருவிற்கு ஆட்களை வயல் வேலைக்கு அழைப்பதற்காக சென்றேன். அப்போது அ.சா.1 ன் வீட்டு வாசலில் சத்தம் கேட்டது . நான் உடனே என்னடா அண்ணன் வீட்டு வாசலில் சத்தம் கேட்கிறதே என்று அ.சா.1ன் வீட்டுக்கு சென்றேன். அப்போது ஆஜர் 1 வது எதிரி வாசலில் நின்று கொண்டிருந்த எனது அண்ணியை குச்சிகாரி, தேவுடியா என்று தகாத வார்த்தைகளால் திட்டினார். அப்போது ஆஜர் 1 வது எதிரி

குடிபோதையில் இருந்தார். நான் ஆஜர் எதிரியை பார்த்தபோது ஏம்பா இத்தனை மணிக்கு உனக்கு இங்கு என்ன வேலை என்று கேட்டேன். அ.சா.1 இடமும் இவருக்கு என்ன பிரச்சனை ஏன் நம்ம வீட்டு வாசலில் நின்று சத்தம் போடுகிறார் என்று கேட்டேன். அதற்கு அ.சா.1 என்னிடம் உங்கள் அண்ணன் கொலை செய்யப்பட்டு இறந்த வழக்கில் நான் சாட்சி அளித்து விட்டு வந்தது குறித்து ஆஜர் எதிரி தன்னை பேசுவதாக சொன்னார். மேற்கண்டவாறு அ.சா.1 என்னிடம் சொல்லிக்கொண்டிருக்கும் போதே ஆஜர் 1வது எதிரி உன் புருசனை அனுப்புன இடத்துக்கே உன்னையும் அனுப்பினால் தான் சரிவருவாய் என்று அ.சா.1 ஐ பார்த்து கூறினார். உடனே நான் ஆஜர் 1 வது எதிரியை உனக்கு என்னைய்யா பிரச்சனை என்று சத்தம் போட்டேன். ஆஜர் 1 வது எதிரி மீண்டும் அ.சா.1 யிடம் பிரச்சனை செய்யும் நோக்கிலேயே நடந்து கொண்டார். நான் ஆஜர் 1வது எதிரியை அங்கிருந்து கையால் தள்ளிய போது ஆஜர் 1வது எதிரி எனது அண்ணி அ.சா.1 ஐ கண்ணத்தில் அறைந்துவிட்டார். அருகில் இருந்த ஜகந்நாதன், ரவி மற்றும் சக்திவேல் மூவரும் ஆஜர் 1வது எதிரியை சம்பவயிடத்திலிருந்து இழுத்து அனுப்ப முயற்சி செய்தார்கள். ஆஜர் 1 வது எதிரி அப்போது எனது அண்ணியை கத்தியை எடுத்து குத்த வந்தார். அதற்குள் ஊர்காரர்கள் கூடிவிட்டார்கள். ஆஜர் 1வது எதிரியை சம்பவயிடத்திலிருந்து அனுப்பி வைத்தார்கள். போலீசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை -**

என்மீதும் எனது அண்ணன் தெட்சிணாமூர்த்தி மீதும், அவரது மகன் சின்னராஜாவின் மீதும் எங்கள் ஊரை சேர்ந்த ரமேஷ் என்பவரை கொலை செய்துவிட்டதாக வழக்கு நடைபெற்றது என்றால் சரிதான். மேற்படி வழக்கில் மாண்புமிகு திருவாரூர் மாவட்ட அமர்வு நீதிமன்றத்தில் எனக்கும் சின்னராஜாவுக்கும தண்டனை வழங்கப்பட்டது என்றால் சரிதான், மேற்படி வழக்கில் மாண்புமிகு உயர் நீதிமன்றத்தில் மேல்முறையீடு செய்யப்பட்டு நான் விடுதலை செய்யப்பட்டுள்ளேன் சின்னராஜாவிற்கு தண்டனை உறுதி செய்யப்பட்டுள்ளது. இறந்துபோன ரமேஷ் என்பவர் எதிரிகளுக்கு உறவினர் என்றால் சரிதான். எனது

அண்ணன் தெட்சிணாமூர்த்தி கொலை செய்யப்பட்ட வழக்கில் இவ்வழக்கின் 1 வது எதிரி, எதிரியாக சேர்க்கப்படவில்லை என்றால் சரிதான். எனது அண்ணன் கொலையுண்ட வழக்கில் மாண்புமிகு மாவட்ட அமர்வு நீதிமன்றத்தால் அவ்வழக்கின் எதிரிகள் அனைவரும் விடுதலை செய்யப்பட்டனர் என்றால் சரிதான். நான் எனது முதல் விசாரணையில், " அ.சா.1 ன் வீட்டு வாசலில் சத்தம் கேட்டது . நான் உடனே என்னடா அண்ணன் வீட்டு வாசலில் சத்தம் கேட்கிறதே என்று அ.சா.1ன் வீட்டுக்கு சென்றேன்" என்று எனது போலீசார் விசாரணையில் கூறவில்லை என்றால் சரியல்ல. நான் எனது முதல் விசாரணையில் கூறியுள்ள, "அப்போது ஆஜர் 1 வது எதிரி குடிபோதையில் இருந்தார். நான் ஆஜர் எதிரியை பார்த்தபோது ஏம்பா இத்தனை மணிக்கு உனக்கு இங்கு என்ன வேலை என்று கேட்டேன். அ.சா.1 இடமும் இவருக்கு என்ன பிரச்சனை ஏன் நம்ம வீட்டு வாசலில் நின்று சத்தம் போடுகிறார் என்று கேட்டேன். அதற்கு அ.சா.1 என்னிடம் உங்கள் அண்ணன் கொலை செய்யப்பட்டு இறந்த வழக்கில் நான் சாட்சி அளித்து விட்டு வந்தது குறித்து ஆஜர் எதிரி தன்னை பேசுவதாக சொன்னார். மேற்கண்டவாறு அ.சா.1 என்னிடம் சொல்லிக்கொண்டிருக்கும் போதே ஆஜர் 1வது எதிரி உன் புருசனை அனுப்புன இடத்துக்கே உன்னையும் அனுப்பினால் தான் சரிவருவாய் என்று அ.சா.1 ஐ பார்த்து கூறினார். உடனே நான் ஆஜர் 1 வது எதிரியை உனக்கு என்னைய்யா பிரச்சனை என்று சத்தம் போட்டேன். ஆஜர் 1 வது எதிரி மீண்டும் அ.சா.1 யிடம் பிரச்சனை செய்யும் நோக்கிலேயே நடந்து கொண்டார். நான் ஆஜர் 1வது எதிரியை அங்கிருந்து கையால் தள்ளிய போது ஆஜர் 1வது எதிரி எனது அண்ணி அ.சா.1 ஐ கன்னத்தில் அறைந்துவிட்டார். அருகில் இருந்த ஜகந்நாதன், ரவி மற்றும் சக்திவேல் மூவரும் ஆஜர் 1வது எதிரியை சம்பவயிடத்திலிருந்து இழுத்து அனுப்ப முயற்சி செய்தார்கள். ஆஜர் 1 வது எதிரி அப்போது எனது அண்ணியை கத்தியை எடுத்து குத்த வந்தார். அதற்குள் ஊர்காரர்கள் கூடிவிட்டார்கள்", என்று எனது போலீசார் விசாரணையில் கூறவில்லை என்றால் சரியல்ல. நான் சொன்னதுபோல் எவ்வித சம்பவமும் நடைபெறவில்லை என்றாலும் எதிரிகள் மீதுள்ள முன்விரோதம் காரணமாக அ.சா.1

கொடுத்த பொய்புகாருக்கு ஆதரவாக பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை - இல்லை**

என்னால் சொல்லப்பட்டு என்னுடைய மேற்பார்வையில் என்னுடைய ஆணையின் கீழ் என் முன்னிலையில் தட்டச்சு செய்யப்பட்டு எதிரியின் முன்னிலையில் சாட்சிக்கு விளக்கப்பட்டு சாட்சியால் சரியென ஒப்புக் கொள்ளப்பட்டது.

JESU BALAN

Digitally signed by JESU BALAN
Date: 2025.10.27 18:21:46 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதித்துறை நடுவர்,
வலங்கைமான்.

Crl.Misc/ 39

# DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE VALANGAIMAN

Calendar

Miscellaneous **Case No. CC. 14/2025**

Preliminary Register

Deposition of **PW- 3 LW-4**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Name | : | ஜெகநாதன் | Father Name | : | கலியன் |
| Village | : | ராஜேந்திரநல்லூர் | Taluk | : | வலங்கைமான் |
| Caste | : | | Calling | : | காய்கறி வியாபாரம் |
| Religion | : | | Age | : | 60 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of 27th day of October 2025.

எதிரிகள் ஆஜர். எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் முன்னிலை.

<u>முதல் விசாரணை-</u>

நான் மேற்படி முகவரியில் வசித்து காய்கறி வியாபாரம் செய்து வருகிறேன். அ.சா.1 ஐ தெரியும். அ.சா.1 எனது அண்ணி முறை ஆவார். ஆஜர் எதிரிகளை தெரியும். ஆஜர் எதிரிகள் எனது ஊரை சேர்ந்தவர்கள். கடந்த 24.08.2024ம் தேதி இரவு சுமார் 10 மணியளவில் நான் வீட்டிலிருந்தேன். ஆஜர் 1வது எதிரி அ.சா.1 ன் வீட்டு வாசலில் சத்தம் போட்டுக்கொண்டிருந்தார். அ.சா.2 ஆஜர் 1 வது எதிரியை மத்திசம் செய்து கொண்டிருந்தார். நானும் எனது அண்ணன் பேரன் சக்திவேலும் சத்தம் கேட்டுக்கொண்டிருக்கிறது வா போய் பார்ப்போம் என்று அ.சா.1 ன் வீட்டு வாசலுக்கு சென்றோம். நானும் அ.சா.2 உடன் சக்திவேலும் ஆஜர் எதிரியை சத்தம்போடாதே

என்று மத்திசம் செய்தோம். அ.சா.1 ம் ஆஜர் 1வது எதிரி குடிபோதையில் இருந்ததால் நீ போ என்று சொல்லி அவரையும் மத்திசம் செய்து அனுப்பி வைத்தோம். ஆஜர் 1வது எதிரி குடிபோதையில் தகாத வார்த்தைகளால் பேசிக்கொண்டிருந்தார். போலீசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை -**

நான் முதல் விசாரணையில் கூறியது போல் சம்பவம் எதுவும நடைபெறவில்லை என்றாலும் 1வது எதிரி அ.சா.1யிடம் எவ்வித பிரச்சனையும் செய்யவில்லை என்றாலும், எதிரிகள் மீதுள்ள முன்விரோதம் காரணமாக அ.சா.1 கொடுத்த பொய்புகாருக்கு ஆதரவாக அ.சா.1 மற்றும் 2 ஆகியோர்கள் சொல்லிக்கொடுத்து பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. முதல் விசாரணையில் நான் கூறிய விபரங்கள் அ.சா.1 மற்றும் 2 சொல்லிக்கொடுத்தவைகளை தான் நான் கூறியுள்ளேன் என்றால் சரிதான்.

**மறுவிசாரணை - இல்லை**

என்னால் சொல்லப்பட்டு என்னுடைய மேற்பார்வையில் என்னுடைய ஆணையின் கீழ் என் முன்னிலையில் தட்டச்சு செய்யப்பட்டு எதிரியின் முன்னிலையில் சாட்சிக்கு விளக்கப்பட்டு சாட்சியால் சரியென ஒப்புக் கொள்ளப்பட்டது.

JESU BALAN

Digitally signed by JESU BALAN
Date: 2025.10.27 18:22:00 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதித்துறை நடுவர்,

வலங்கைமான்.

Crl.Misc/39

# DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE VALANGAIMAN

Calendar

Miscellaneous **Case No. CC. 14/2025**

Preliminary Register

Deposition of **PW- 4 LW-5**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Name | : | சக்திவேல் | Father Name | : | சேகர் |
| Village | : | ராஜேந்திரநல்லூர் | Taluk | : | வலங்கைமான் |
| Caste | : | | Calling | : | திருப்பூர் டையிங் கம்பெனி |
| Religion | : | | Age | : | 25 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of 27th day of October 2025.

எதிரிகள் ஆஜர். எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் முன்னிலை.

**முதல் விசாரணை-**

நான் மேற்படி முகவரியில் வசித்து திருப்பூரில் உள்ள டையிங் கம்பெனியில் பணிபுரிந்து வருகிறேன். அ.சா.1 ஐ தெரியும். அ.சா.1 எனக்கு பாட்டி முறை ஆவார். ஆஜர் எதிரிகளை தெரியும். ஆஜர் எதிரிகள் எனது ஊரை சேர்ந்தவர்கள். நான் திருப்பூரில் கடந்த 8 வருடங்களாக வேலை செய்து வருகிறேன். அவ்வப்போது ஊருக்கு வந்து செல்வேன். கடந்த 24.08.2024ம் தேதி இரவு சுமார் 10 மணியளவில் நான் வீட்டு வாசலில் நின்றுகொண்டிருந்தேன். அப்போது ஆஜர் 1வது எதிரி அ.சா.1 ன் வீட்டு வாசலில் சத்தம் போட்டுக்கொண்டிருந்தார். நானும் எனது தாத்தா அ.சா.3ம் ஆஜர் 1வது எதிரி சத்தம் போட்டுக் கொண்டிருந்ததை தடுத்தோம். அப்போது ஆஜர் 1 வது எதிரி என் Case க்கு சாட்சி சொல்ல போனால் உன் புருசனை போட்டது போல்

உன்னையும் போட்டு விடுவேன் என்று அ.சா.1 யிடம் சொன்னார். பேசிக்கொண்டிருக்கும் போதே ஆஜர் 1 வது எதிரி அ.சா.1ன் கண்ணத்தில் அறைந்துவிட்டார். நானும் எனது தாத்தாவும் ஆஜர் 1 வது எதிரியை சமாதானம் செய்தோம். போலீசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை -**

நான் முதல் விசாரணையில் கூறியுள்ள, " ஆஜர் 1வது எதிரி அ.சா.1 ன் வீட்டு வாசலில் சத்தம் போட்டுக்கொண்டிருந்தார். நானும் எனது தாத்தா அ.சா.3ம் ஆஜர் 1 வது எதிரி சத்தம் போட்டுக் கொண்டிருந்ததை தடுத்தோம். அப்போது ஆஜர் 1 வது எதிரி என் Case க்கு சாட்சி சொல்ல போனால் உன் புருசனை போட்டது போல் உன்னையும் போட்டு விடுவேன் என்று அ.சா.1 யிடம் சொன்னார். பேசிக்கொண்டிருக்கும் போதே ஆஜர் 1 வது எதிரி அ.சா.1ன் கண்ணத்தில் அறைந்துவிட்டார்", என்று போலீசார் விசாரணையில் கூறவில்லை என்றால் சரியல்ல. போலீசார் என்னை என்று விசாரணை செய்தார்கள் என்றால் போலீசார் என்னை விசாரணை செய்யவில்லை. நான் சொன்னதுபோல் எவ்வித சம்பவமும் நடைபெறவில்லை என்றாலும் 1வது எதிரி அ.சா.1யிடம் எவ்வித பிரச்சனையும் செய்யவில்லை என்றாலும், எதிரிகள் மீதுள்ள முன்விரோதம் காரணமாக அ.சா.1 கொடுத்த பொய்புகாருக்கு ஆதரவாக அ.சா.1 மற்றும் 2 ஆகியோர்கள் சொல்லிக்கொடுத்து பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. முதல் விசாரணையில் நான் கூறிய விபரங்கள் அ.சா.1 மற்றும் 2 சொல்லிக்கொடுத்தவைகளை தான் நான் கூறியுள்ளேன் என்றால் சரிதான்.

**மறுவிசாரணை - இல்லை**

என்னால் சொல்லப்பட்டு என்னுடைய மேற்பார்வையில் என்னுடைய ஆணையின் கீழ் என் முன்னிலையில் தட்டச்சு செய்யப்பட்டு எதிரியின் முன்னிலையில் சாட்சிக்கு விளக்கப்பட்டு சாட்சியால் சரியென ஒப்புக் கொள்ளப்பட்டது.

JESU BALAN Digitally signed by JESU BALAN Date: 2025.10.27 18:22:10 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதித்துறை நடுவர்,

வலங்கைமான்.

Crl.Misc/ 39

# DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE

VALANGAIMAN

Calendar

Miscellaneous **Case No. CC. 14/2025**

Preliminary Register

Deposition of **PW- 5 LW-6**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Name | : | குரு | Father Name | : | சேகர் |
| Village | : | ராஜேந்திர நல்லூர் | Taluk | : | வலங்கைமான் |
| Caste | : | | Calling | : | விவசாயம் |
| Religion | : | | Age | : | 26 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of 27th day of October 2025.

எதிரிகள் ஆஜர். எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் முன்னிலை.

**முதல் விசாரணை-**

நான் மேற்படி முகவரியில் வசித்து விவசாயம் செய்து வருகிறேன். அ.சா.1 ஐ தெரியும். அ.சா.1. எனது பாட்டி முறையாவார். ஆஜர் எதிரிகளை தெரியும். ஆஜர் எதிரிகள் எனது ஊர்காரர்கள் ஆவார்கள். கடந்த 24.08.2024ம் தேதி இரவு 10.00 மணியளவில் நான் வீட்டிலிருந்தபோது ஆஜர் 1 வது எதிரி மதுபோதையில் அ.சா.1 ஐ தகாத வார்த்தைகளால் திட்டிக்கொண்டிருந்தார். மறுநாள் காலை 10.00 மணிக்கு வலங்கைமான் போலீசார் அ.சா.1ன் வீட்டிற்கு வந்து விசாரணை செய்தார்கள். போலீசார் வரைபடம் வரைந்தார்கள். என்னிடம் காட்டப்படும் பார்வை மகசரில் உள்ள இரண்டாவது கையொப்பம் என்னுடையதுதான். மேற்படி கையொப்பத்தை போலீசார் 25.08.2024 ம் தேதி சம்பவயிடத்தை பார்வையிட்டு விசாரணை செய்தபோது

போட்டுக்கொடுத்தேன். என்னுடன் சர்குணம் என்பவரும் கையொப்பம் செய்தார். ( பார்வை மகசர் **அ.சா.ஆ.2 ஆக** குறியீடு செய்யப்படுகிறது) போலீசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை -**

நான் கையொப்பம் செய்ததாக கூறப்படும் பேப்பரில் எத்தனை பக்கங்கள் எழுதியிருந்தது அதில் என்ன எழுதியிருந்தது என்ற விபரம் எனக்கு தெரியுமா என்றால் எனக்கு தற்போது நியாபகமில்லை. மேற்படி கையொப்பத்தை காவல் நிலையத்தில் வைத்து போட்டேன் என்று சொன்னால் சரியல்ல, ஊரில்தான் போட்டேன். அ.சா.1 எனது உறவினர் என்பதால் சம்பவம் குறித்தும் சம்பவயிடத்திற்கு போலீசார் வந்ததாகவும் சம்பவயிடத்தில் கையொப்பம் செய்ததாகவும் பொய்யாக கூறுகிறேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை - இல்லை**

என்னால் சொல்லப்பட்டு என்னுடைய மேற்பார்வையில் என்னுடைய ஆணையின் கீழ் என் முன்னிலையில் தட்டச்சு செய்யப்பட்டு எதிரியின் முன்னிலையில் சாட்சிக்கு விளக்கப்பட்டு சாட்சியால் சரியென ஒப்புக் கொள்ளப்பட்டது.

JESU BALAN

Digitally signed by JESU BALAN
Date: 2025.10.27 18:22:20 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதித்துறை நடுவர்,
வலங்கைமான்.

Crl.Misc/39

# DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE

VALANGAIMAN

Calendar

Miscellaneous **Case No. CC. 14/2025**

Preliminary Register

Deposition of **PW- 6 LW-7**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Name | : | சர்குணம் | Father Name | : | முத்தையன் |
| Village | : | ராஜேந்திர நல்லூர் | Taluk | : | வலங்கைமான் |
| Caste | : | | Calling | : | விவசாயம் |
| Religion | : | | Age | : | 44 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of 27th day of October 2025.

எதிரிகள் ஆஜர். எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் முன்னிலை.

**முதல் விசாரணை-**

நான் மேற்படி முகவரியில் வசித்து விவசாயம் செய்து வருகிறேன். அ.சா.1 ஐ தெரியும். அ.சா.1. எனது அக்கா முறையாவார். ஆஜர் எதிரிகளை தெரியும். ஆஜர் எதிரிகள் எனது ஊர்காரர்கள் ஆவார்கள். கடந்த 24.08.2024ம் தேதி இரவு 10.00 மணியளவில் நான் எங்கள் ஊரிலுள்ள கோவிலில் இருந்தபோது ஆஜர் 1 வது எதிரி மதுபோதையில் அ.சா.1 வீட்டு வாசலில் நின்றுகொண்டு அ.சா.1 ஐ குச்சிகாரி, தேவுடியா என்று தகாத வார்த்தைகளால் திட்டிக்கொண்டிருந்தார். மேலும் ஆஜர் 1 வது எதிரி அ.சா.1 ஐ வாடி போடி என்று பேசியும் அடித்தும் விட்டார். ஆஜர் 1 வது எதிரி அ.சா.1 பார்த்து உன் புருசனை கொன்றதுபோல் உன்னையும் கொன்றுவிடுவேன் என்று சொன்னார். நான் ஆஜர் 1 வது எதிரியை போ தம்பி என்று சொல்லி அனுப்பி

வைத்தேன். அப்போது ஆஜர் 1வது எதிரியின் தம்பி ஆனந்தராஜ் என்பவரும் ஆஜர் 1 வது எதிரியின் மனைவியும் சம்பவயிடத்திற்கு வந்து ஆஜர் 1 வது எதிரியை அழைத்து சென்றார்கள். என்னிடம் காட்டப்படும் பார்வை மகசரில் உள்ள முதலாவது கையொப்பம் என்னுடையதுதான். மேற்படி கையொப்பத்தை 25.08.2024 ம் தேதி காலை 11.00 மணியளவில் வலங்கைமான் காவல் உதவி ஆய்வாளர் விசாரணை செய்தார். மேற்படி கையொப்பத்தை என்னிடம் பெற்றுக்கொண்டார். என்னுடன் குரு என்பவரும் கையொப்பம் செய்தார். போலீசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை -**

அ.சா.2 அறிவழகன் எனது மைத்துனர் ஆவார். எனது வீடு மேட்டுத் தெருவில் உள்ளது என்றால் சரிதான். எனது வீட்டிற்கும் அ.சா.1 ன் வீட்டிற்கும் 1 கி.மீ தூரம் இருக்கும் என்றால் சரியல்ல, எனது வீட்டின் பின்புறம்தான் அ.சா.1ன் வீடு உள்ளது. நான் வழக்கிற்காக எனது வீட்டின் பின்புறம்தான் அ.சா.1ன் வீடு உள்ளது என்று பொய்யாக கூறுகிறேன் என்றால் சரியல்ல. நான் எனது முதல் விசாரணையில் கூறியுள்ள, " கடந்த 24.08.2024ம் தேதி இரவு 10.00 மணியளவில் நான் எங்கள் ஊரிலுள்ள கோவிலில் இருந்தபோது ஆஜர் 1 வது எதிரி மதுபோதையில் அ.சா.1 வீட்டு வாசலில் நின்றுகொண்டு அ.சா.1 ஐ குச்சிகாரி, தேவுடியா என்று தகாத வார்த்தைகளால் திட்டிக்கொண்டிருந்தார். மேலும் ஆஜர் 1 வது எதிரி அ.சா.1 ஐ வாடி போடி என்று பேசியும் அடித்தும் விட்டார். ஆஜர் 1 வது எதிரி அ.சா.1 பார்த்து உன் புருசனை கொன்றதுபோல் உன்னையும் கொன்றுவிடுவேன் என்று சொன்னார். நான் ஆஜர் 1 வது எதிரியை போ தம்பி என்று சொல்லி அனுப்பி வைத்தேன். அப்போது ஆஜர் 1வது எதிரியின் தம்பி ஆனந்தராஜ் என்பவரும் ஆஜர் 1 வது எதிரியின் மனைவியும் சம்பவயிடத்திற்கு வந்து ஆஜர் 1 வது எதிரியை அழைத்து சென்றார்கள்" என்று எனது போலீசார் விசாரணையில் கூறவில்லை என்றால் சரிதான். நான் கையொப்பம் செய்ததாக கூறப்படும் பேப்பரில் என்ன தலைப்பில் எத்தனை பக்கங்கள் எழுதியிருந்தது அதில் என்ன எழுதியிருந்தது என்ற விபரம் எனக்கு தெரியுமா என்றால் தலைப்பு தெரியாது சண்டை குறித்து எழுதியிருந்தது. மேற்படி

கையொப்பத்தை காவல் நிலையத்தில் வைத்து போட்டேன் என்று சொன்னால் சரியல்ல, ஊரில்தான் போட்டேன். அ.சா.1, அ.சா.2 எனது உறவினர்கள் என்பதால் சம்பவம் குறித்தும் சம்பவயிடத்திற்கு போலீசார் வந்ததாகவும் சம்பவயிடத்தில் கையொப்பம் செய்ததாகவும் பொய்யாக கூறுகிறேன் என்றால் சரியல்ல. நான் முதல் விசாரணையில் கூறியவாறு எவ்வித சம்பவமும் நடைபெறவில்லை என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை - இல்லை**

என்னால் சொல்லப்பட்டு என்னுடைய மேற்பார்வையில் என்னுடைய ஆணையின் கீழ் என் முன்னிலையில் தட்டச்சு செய்யப்பட்டு எதிரியின் முன்னிலையில் சாட்சிக்கு விளக்கப்பட்டு சாட்சியால் சரியென ஒப்புக் கொள்ளப்பட்டது.

JESU BALAN

Digitally signed by JESU BALAN
Date: 2025.10.27 18:22:37 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதித்துறை நடுவர்,

வலங்கைமான்.